# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,916 — 1970 ජූලි 24 වැනි සිකුරාදා — 1970.7.24**

**14,916 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூலை மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 233 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. . | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 233 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 234 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல்.டி.—பி. 39/52 : எல்ஜிடி/எச்எ/1/4/18.

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

**கட்டளை**

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் சொல்லப்பட்ட பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரயம்பதி கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு ஏற்புடையதாதலாகாது என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

ෆී. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1970 ம் ஆண்டு யூலை மீ 1 ந் உ.

7–1003—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

### நகரங்களினதும் கிராமங்களினதும் பெயர் மாற்றுதல்

கீழ்க்காணப்படும் முதலாவது அட்டவணையிற் காணப்படும் கிராமத்தின் பெயர் இரண்டாவது அட்டவணையின்படி மாற்றப்பட்டிருக்கின்றது என்பதை அறியத்தரப்படுகின்றது.

பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக,
பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சர்.

பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு, 1970 ம் ஆண்டு யூலை மீ 14 ம் உ,

| மாவட்டம் | 1 வது அட்டவணை | 2 வது அட்டவணை |
|---|---|---|
| கொழும்பு | .. ஹுணுகந்தன | .. தொம்பே மேற்கு |

7–1021—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

## உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு, 1970 ம் ஆண்டு ஜூலை மீ 13 ந் உ.

**அட்டவணை**

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | **இரத்தினபுரி மாவட்டம்** |
| | அட்டகலன் கோறளை, பன்னில்பத்து கிராமச்சபை |
| 13 | .. உணபொத்த விதானேலாகே ரூபவிமல |
| | குறுவிட்ட கிராமச் சபை |
| 4 | .. சமறகோன் லிஸ்பன் |

7–1023—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் கூறிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகன்.*

# நானாவித அறிவித்தல்கள்

## முல்லைத்தீவு பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

முல்லைத்தீவு பட்டின சபையானது (256 ம் அதிகாரமாம்) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 161ம், 163ம் ஆகிய பிரிவுகளின் கீழ் மேல்வரும் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள உத்தரவுக் கட்டணம் அதில் விளக்கியுள்ள உத்தரவின் பேரில், இப்பிரசுரம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகும் நாளிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது என்பதை இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

ம. சூ. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர்,
பட்டின சபை, முல்லைத்தீவு.

பட்டினசபை அலுவலகம்,
முல்லைத்தீவு, 1970 ம் ஆண்டு ஆடி மீ 10 ந் வ.

அட்டவணை

| உத்தரவின் தன்மை | வருடாந்தக் கட்டணம் ரூ. ச. |
|---|---|
| பாவனைக்கு உட்படுத்தப்படும் வளவிற்கு அல்லது இடத்திற்கு உத்தரவுப்பத்திரம் வழங்கல் | |
| "மீனுக்கு பனிக்கட்டி போடுதல்" | 100 00 |

7–1007—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

## ஏறாவூர் பட்டினம்

### கசாப்புக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

கசாப்புக்காரர் பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 272 ன் 7ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையிற் காணப்படும் பேர்வழிக் காரர்களிடமிருந்து 1970 ம் ஆண்டிற்கு கசாப்புத் தொழில் நடாத்த அனுமதிக்கும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்தப் பட்டின சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப் படும் அனுமதி வழங்குவதை மறுக்க விரும்பினுல், மறுப்பிற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப் பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றனர்.

பி. எ. ஜே. காசிநாதர்,
விசேட ஆணையாளர்,
ஏறாவூர் பட்டினம்.

விசேட ஆணையாளரின் அலுவலகம்,
ஏறாவூர் பட்டினம்,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 8 ந் வ.

அட்டவணை

| விண்ணப்பக்காரரின் பெயர், விலாசம் | வியாபாரம் செய்யவிருக்கும் இடத்தின் பெயர், விலாசம் |
|---|---|
| இலவக்கனி நெய்னு, 3 ம் குறிச்சி, புன்னக்குடா வீதி, ஏறாவூர் | 72, திருகோணமலை வீதி, 5 ம் வட்டாரம், ஏறாவூர் |

7–1010—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

## கரிக்கட்டுமூலை மேற்கு கிராமசபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

(அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணப்படும் அட்டவணையில் காண்பவரிடமிருந்து 1970 ம் ஆண்டுக்கு இறைச்சிக் கடைக்கு உத்தரவுப்பத்திரம் தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கிறது.

இக்கிராமசபையின் இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கும் உத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்புக்கான காரணங்களை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினுன்கு நாட்களுக்கிடையில் இணைப்பிரதியாக எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயரும் விலாசமும் | வியாபாரத்தின் தன்மை | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|
| (1) தா. மு. அசனுலெவ்வை, குமுளமுனை, முள்ளியவளை | ஆட்டிறைச்சி/மாட்டிறைச்சி | அளம்பில் |

ந. குமாரசாமி,
தலைவர்,
கரிக்கட்டுமூலை மேற்கு கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
செம்மலை, அளம்பில்,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 27 ந் வ.

7–1011—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை **அரசாங்க விடுமுறை** நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூன் | 5. 6.70 | வெள்ளி | 29. 5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11. 6 70 | வியாழன் | 5. 6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18. 6.70 | வியாழன் | 11. 6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25. 6.70 | வியாழன் | 18. 6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| யூலை | 2. 7.70 | வியாழன் | 25. 6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 10. 7.70 | வெள்ளி | 2. 7.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 17. 7.70 | வெள்ளி | 10. 7.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 24. 7.70 | வெள்ளி | 17. 7 70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 31. 7.70 | வெள்ளி | 24. 7.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| ஓகத்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந ப. 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி. ப. 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது